(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES UNDER PREVENTION OF CORRUPTION ACT, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case Number | : | Spl.C.C.No.5/2016 |
| Deposition Of Witness for | : | PW4 |
| Name | : | **Thiru.M.Abdul Razak** |
| Father's Name | : | Thiru.Muthu Mohammad |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **12th September 2025.**

(1 முதல் 4 மற்றும் 11-ம் எதிரிகள் ஆஜர். எதிரிகள் 6 முதல் 10 மற்றும் 12 ஆஜர் இல்லை. கு.வி.மு.ச. பிரிவு 317 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. It is recorded as directed by the **Hon'ble High Court, Madras vide R.O.C.No.65929-A/2022/F1, P.Dis.No.17/2023 dt.23.01.2023.**)

சாட்சி ஆஜர். சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை** :

1. நான் தற்போது மானாமதுரை, பூக்காரத்தெருவில் குடியிருந்து வருகிறேன். தமிழ்நாடு வனத்தோட்ட கழகத்தில் சிவகங்கை பிரிவில் சாத்தரசன்கோட்டை பீட்டில் வனக்காப்பாளராக பணிபுரிந்து

கடந்த 2009 ம் ஆண்டு பணிஓய்வு பெற்றேன்.

2. நான் பணிபுரிந்த காலத்தில் மண்டல மேலாளராக பணிபுரிந்தவர் இஸ்லாம் மதத்தினை சேர்ந்தவர், அவர் பெயர் ஞாபகமில்லை. திரு.அக்பர் என்பவர் வனச்சரகராக இருந்தார்.திரு.பழனிசாமி என்பவர் வனவராக இருந்தார். மண்டல மேலாளராக பணிபுரிந்தவர் பெயர் திரு.நைனார்முகமது என்று தற்போது சாட்சி கூறுகிறார்.

3. எனது மனைவி பெயரில் டிராக்டர் மற்றும் டேங்கர் இருந்தது. அதன் பதிவெண். TN 63 D 7786, டேங்கர் மற்றும் டிராக்டருக்கு ஒரே பதிவெண் தான் இருந்தது. தமிழ்நாடு வனத்தோட்ட கழகத்தில் உழவு பணிக்காக வனச்சரக திரு.அக்பர் அவர்கள் வரச்சொன்னதன் பேரில் எனது மகனை 2006-ம் ஆண்டு சென்றார். தற்போதுவரை எனது மகன் உழவு பணிக்காக வனத்தோட்ட கழகத்தில் டிராக்டர் ஓட்டும் பணியை செய்து வருகிறார். ஒரு ஹெக்டேருக்கு டிராக்டர் வாடகையாக ரூ.1200/- கொடுத்ததாக எனக்கு ஞாபகம். இவ்வழக்கு தொடர்பாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1, 2, 6, 9, 11–ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

**(மற்ற எதிரிகள் தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார்கள்.)**

1. 2006–ம் ஆண்டு வனச்சரக திரு.அக்பர் அவர்கள் எனது மகனை உழவு பணிக்காக அழைத்ததற்கு பிறகு எனது மகனை எந்த அலுவலர்கள் எப்போதெல்லாம் அழைத்தார்கள் என்பது குறித்து தெரியுமா என்றால் தெரியாது. தமிழ்நாடு வனத்தோட்டக் கழகம் என்பது 1974–ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது என்றால் சரிதான். தமிழ்நாடு வனத்தோட்டக் கழகம் என்பதும் தமிழ்நாடு வனத்துறை என்பதும் வெவ்வேறானது என்றால் சரிதான்.

2. வனத்தோட்டக் கழகம் என்பது தனிக்கழகமாக இயங்கக்கூடியது என்றால் சரிதான். வனத்துறையில் பணியாற்றும் அரசு ஊழியர்களுக்கு பென்சன் பயன்கள் கிடைக்கும் என்றால் சரிதான். வனத்தோட்ட கழகத்தில் பணியாற்றி ஓய்வு பெற்ற அனைவருக்கும் சொர்ப்பத் தொகைதான் ஓய்வு ஊதியமாக கிடைக்கும் என்றால் சரிதான். நான் என்ன ஓய்வு ஊதியம் பெறுகிறேன் என்றால் வனக்காப்பாளராக இருந்து ஓய்வு பெற்ற எனக்கு ரூ.1775/– ஓய்வு ஊதியமாக கிடைக்கிறது.

3. வனத்தோட்ட கழகத்தில் கடைநிலையில் வனக்காவலர் (Forest Watcher), வனக்காப்பாளர் (Forest Guard), வனவர் (Forester), வனச்சரகர் (Forest Ranger), மண்டல மேலாளர் (Regional Manager), மேலாண்மை இயக்குநர் (Managing Director) கழகத்தில் கழக உறுப்பினர்கள் மற்றும் தலைவர் (members and chairman) மேலும் அரசு சார்பில் ஒரு செயலாளர் (Secretary) இருப்பார்கள் என்றால் சரிதான். வனத்தோட்ட கழகத்தின் நோக்கம் காப்பு காடுகளை குத்தகைக்கு எடுத்து தைலமரங்கள் வளர்ப்பது, அதிலிருந்து கிடைக்கும் பல்புகளை பேப்பர் தயார் செய்வதற்கு அனுப்புவது மற்றும் முந்திரி தோட்டம் அமைத்து பராமரிப்பது ஆகும் என்றால் சரிதான்.

4. நான் தமிழ்நாடு வனத்தோட்ட கழகத்தில் என்ன பணியில் சேர்ந்தேன் என்றால் டிராக்டர் டிரைவராக பணியில் சேர்ந்து பின்பு வனக்காவலர் பிறகு வனக்காப்பாளராக இருந்து பணிஓய்வு பெற்றேன். காரைக்குடியில் அமைந்துள்ள மண்டல மேலாளர் அலுவலகம் போன்று தமிழ்நாட்டில் மொத்தம் 6 அலுவலகம் உள்ளது என்றால் சரிதான். அந்த அலுவலகத்தில் மண்டல மேலாளராக 1ம் எதிரி எனக்கு மேல் அதிகாரியாக பணிபுரிந்தவர் என்றால் சரிதான். நான் எந்த ஆண்டு பணி ஓய்வு

பெற்றேன் என்றால் 2009 ம் ஆண்டு ஜீன் மாதம் ஆகும்.

5. காரைக்குடியில் அமைந்துள்ள மண்டல மேலாளர் அலுவலகத்திற்கு கீழ் காரைக்குடி, புதுவயல், கல்லல், சிவகங்கை வரும் என்றால் சரிதான். காரைக்குடி மண்டல மேலாளர் அலுவலகத்திற்கு உட்பட்ட சிவகங்கை பிரிவில் பணிபுரிந்தேன் என்றால் சரிதான். நான் சிவகங்கை பிரிவில் சுமார் 3, 4 ஆண்டுகள் பணிபுரிந்தேன் என்றால் சரிதான். காரைக்குடி மண்டல மேலாளர் அலுவலகத்திற்கு உட்பட்ட 4 உட்பிரிவுகளிலும் தைலமரக்கன்றுகள் கடந்த 2006-ம் ஆண்டு நடப்பட்டது என்றால் சரிதான். ஒவ்வொரு ஆண்டும் சட்டிக்கலப்பை வைத்து உழுதல் செய்ய வேண்டும் என்றால் இல்லை, இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை தான் செய்ய வேண்டும். மரக்கன்றுகளை வளர்த்து 7 வருடங்களில் வெட்டி எடுத்து விடுவோம்.

6. 2005, 2006-ம் ஆண்டுகளில் நடப்பட்ட தைலமரக்கன்றுகள் கடந்த 2008-ம் ஆண்டு சுமார் 22 அடி உயரம் இருந்தது என்றால் சரிதான். ஒரு ஹெக்டேர் என்பர் 2 ஏக்கர் 47 சென்ட் என்றால் சரிதான். உழவடை பணியில் வனத்தோட்ட கழகத்தினை பொறுத்தமட்டில் ஏலத்திற்கோ டெண்டருக்கோ விடுவது கிடையாது என்றாலும் Petty Contractor க்கு தான்

விடுவது என்றால் சரிதான். Petty Contractor வைத்து வேலை வாங்குவது வனக்காவலர், வனக்காப்பாளர், வனவர் ஆகியோரது பொறுப்பு என்றால் சரிதான். மேற்படி வேலைகள் முடிந்தவுடன் வந்து மேற்பார்வை செய்வது வனச்சரகரின் பணி என்றால் சரிதான். அதேபோல் மண்டல மேலாளர் காரைக்குடி மண்டலத்திற்கு உட்பட்ட வேலை நடைபெற்ற பணிகளை 25% பார்வையிட்டால் போதும் என்றால் சரிதான். 2005, 2006-ல் நடப்பட்ட மரக்கன்றுகள் முறைப்படி வளர்க்கப்பட்டு அதிலிருந்து பல்புகள் எடுக்கப்பட்டு கரூர் காகித தொழிற்சாலை மற்றும் மற்ற தொழிற்சாலைகளுக்கு அனுப்பப்பட்டு நிறைய லாபங்கள் வந்தது என்றால் சரிதான்.

7. என்னை காவல் ஆய்வாளர் எப்போது விசாரித்தார் என்றால் 2011-ம் ஆண்டு விசாரித்தார். Petty Contractor உடன் Agreement போட்டது மற்றும் வேலைகள் முறைப்படி நடந்தது என்றால் சரிதான். பொதுவாக ஒரு Petty Contractor க்கு ரூ.10000/-க்கு தான் கொடுக்க முடியும் என்றால் அது குறித்து எனக்கு தெரியவில்லை. எனது மகன் உழவடை வேலைக்கு சென்று முறைப்படி பணம் பெற்றுக் கொண்டார் என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை</u>** : இல்லை.

“Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct”

ANITHACHRISTY J

Digitally signed by ANITHACHRISTY J
Date: 2025.09.12 13:59:53 +0530

**Special Judge,**
P.C.ACT Cases,
Sivagangai.